சைவ பரிபாலன சபை வெளியீடு.
ஆரம்பம்: விரோதி ஸ (1889) ஆவணி மீ 28-ம் உ

உ
இலவசம்

செய்தித்தாளாகப்
பதிவுபெற்றது

இந்து சாதனம்

வெள்ளிக்கிழமை தோறும்
வெளிவருவது

Hindu Organ

பிரதி விலை: சதம் 25.

புத்-கo1] யாழ்ப்பாணம்: காலயுத்தி ஸ்ரீ மார்கழி மீ கச உ வெள்ளிக்கிழமை (29-12-1978) [இல-ந நி

இமைப்பொழுதும் எம் நெஞ்சில் நீங்காதான் இறைவன்

என்றுரைத்த வாதவூர் ஏந்தலை எண்ண வைக்கும் புராணம்

மார்கழித் திருவாதிரை ஈருகவுள்ள பத்து நாட்களிற் கோயில்கள் எங்கும் திருவாசக ஓசையும் திருவாதவூரர் புராண படனமும் மக்களை மகிழ்வித்த வண்ணம் இருக்கும் வனப்பு வரையற்றது.

தேனெழுகு செம்பொருள் பொதிந்த திருவாசகத்தை ஓதவைத்த ஞானியின் பேரானந்தப் பேற்றினைச் சாற்றும் சரிதை தித்திப்பாகவே இருக்கும் எனபதைக் கடவுணமாமுனிவர் கவினுறக் காட்டியிருக்கின்றனர்.

புராணங்கள் பொருட் பொலிவுடன் புனைந்துரை மாகக் கவிஞனின் கற்பனையில் எழுந்த வருணனைகளை பலவற்றையும் கொண்டதாகவே இருக்கும். திருவாதவூரடிகள் புராணத்திலோ வரலாறும் அணியுரையும் எடுத்த பொருள்மீது உறும் கனதையை ஒழுங்கு தவறாமல் இயம்பவைக்கின்றன. தொடர்ச்சியாகப் படிக்கின்ற மாணாக்கன் உளத்தில் உவகையையும் அறிவுணர்ச்சியையும் ஒருங்கே ஊட்டுந் தகைமைசான்ற இப்புராணம் கேட்போரைச் சமயக் கருத்தில் ஆடசி பிறச் செய்யும் வகையதி, தெய்வசிகாமணியாகிய மெய்ப் பொருளை வழிபற்றிய மூலம் விளங்க வைக்கும் வனப்புகூடியதிப்புராணம். இதனைப் பத்துநாட்களில் பத்தியுடன் படித்தவர்களை பயன சொன்னவர்களை பற்றுடன் உற்றுக் கேட்டவர்களை யாவரும் பரமசிவனுபூதியை அடைவதில் ஐயமுமில்லை விருமமுமில்லை.

குருந்த மரத்தடியிற் குருவுபதேச நிகழ்ச்சியைத் தருப்பொலிவுடன் எடுத்தியம்பும் கடவுணமாமுனிவர் எங்கணுமுள்ளீன குருசீடகோலத்தை உருவகிப்பதே தெளிவையும் ஈசனது திருவடியையும் போதமாயப் புகட்டியிருக்கும் புலமை வியப்பை சால புடையதாகையால் ஈசன் சித்தாந்தம் பயிலுவோருக்கு அறிவுக் களஞ்சியமாக வளவருளாற்றல் திருநூல்.

பெரியபுராணத்துக்குரிய அருந்தமிழ் நடை திருவாதவூரடிகளி புராணம் செறிவிலே திழ்ன்றதென்பதைச் சமயகுரவர் நால்வரையும் குருவாகக் கொள்பவர்கள் அறிவார்கள்

இவ்விரு புராணங்களிலும் காப்புச் செய்யுட்களின் கருத்தொற்றுமை அவற்றின் பெருமைக்குப் பொருத்தமாயமைதலை நோக்கும்பொழுது இலகுவில் எழில தெற்றென விளங்குகின்றது.

உலகெலாம உணர்ந்தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன
அலகில சோதியன அமபலத் தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம

இறைவனை உணர்த்தும் அடைமொழிகளின் நெறியே முதற்கண் உள்ளத்திலே ஒளியமாய்ப் படிகின்றது.

மாலயன் அறியாத மலையென எனவழமையாகக் கூறப்படுவது போலலாது உலகுளாரால் உணரப்படுவதாகியன, எனிமதியையும் கங்கையையுமணிந்த தனை ஒளிப பிளமபாய் ஓங்குமன - அதாலலையில்த தனின அருஞ்சயல அப்பலத்தினைக்கண நடனம் ஆடுவது. ஆகம அந்த மலர் அடியை எடுத்த கருமம் தொடுத்த வாழ்த்துவோம்; வணங்குவோம என்னாச் சேக்கிழார் சுவாமிகள்.

பவளமால்வரையின
நிலவிறப்பது போற்
பரந்தநீறழகு பசுமேனியிற
றிவளமாதுடனின ருடிய
பரமன் சிறுவனைப்
பாரதப் பெருமபோ
தவளமாமருப் பின்ன
திருடித தொரு காத்தி
தரிததுயா கிபபுறத்
தெழுதும
கவளமா களிறதுனை
றிருமுகம படைதத
கடவுளே நினைந்தது
கை தொழுவாம்.

உலகதின் உபர்ந்த உறுப்பாகியது பெருமை

மலைகளுட் செம்மையுற்றி லங்குவது பவளமால்வரை, அதன்மீது இருசுடர் ஒளி எறிபதபோன்று திரு மேனியிலே திருநீற்றின் பிரபை அழகு பொலிய உலகன்னையுடன் நின்ற நடனமாடிய பரமனைத் தரித்த அப்பரமனின் உருவாகிய ஓங்காரப் பொருளைக் கைதொழுகின்றோம் கூட.

சோதியாய் விளங்கும் ஆதியை நினைவூட்டும் வகையிலே திருநீற்றையும் அண்டங்கள் அனைத்தையும் ஆடரங்காகக் கொண்டு தூக்கிய திருவடி நடனத்தையும் விசேடித்துக் கடவுள் வணக்கம் செய்தனர் தெய்வப் புலமையாளர் இருவரும்.

பெருவாதிற் சைவத்தின்
பெறறிமிக மாயம
மருவாது வாழமன்னன்
வணமை — அருள்போதம்
தந்ததிரு வாதவூர்ச்
சறகுருவின சால்புணரிற்
சிந்தை தெளியும் திகழ்ந்து.

— —

சுழத்துச சிதம்பரத்தில் மணிவாசகர் விழா

காரைநகர் மணிவாசகர் சபையால் வருடாந்தம் நடாத்தப்பட்டு வருகின்ற மணிவாசகர் விழா "தமமுறை 24 வது ஆண்டாக சுழத்துச் சிதம்பர தேவஸ்தான சபாத மணடபத்தில் ஜனவரி 7 ஆம் திகதி தொடங்கி 11 ஆம் திகதிவரை ஐந்து நாட்களுக்கு நடைபெற வுளளது.

இவ்விழாவினை ஆரம்பித்து வைத்து ஐந்து நாட்களுக்கும் சொறபொழிவாறறவிருக்கும் தமிழகத்திலிருந்து தருமபுர ஆதீனப் பலகலைக்கழகப் பேராசிரியர் முதலவர், திருமைபுர ஆதீனப் புலவர், திருநெறிச்செயமல, நலலூர்ச் சைவப் புலவர் வித்துவான் வி. சபா. குருசாமிதேசிகர் எம ஏ அவர்கள் வருகை தரவுள்ளனர்.

இவருடன சுழத்திலுள்ள சைவப்பெரி யார்களான வித்துவான் க. சொக்கலிங்கம், (சொக்கன்) அருட்செல்வர் சி. விஸ்வநாதனபிள்ளை தருமை மொழியரசி, வித்துவான் திருமதி வசந்தா அருளாநந்தநாயகி, திருமதி மங்கையர்க்கரசி [illegible]

[illegible] விழாவிற் கலந்து கொண்டு சொறபொழிவாறறுவரெனனர்.

மாநாடு நிச்சயிக்கப்பட்டுள்ளதை அறிந்த சைவப் பெரியார்களும் ஆன்மீக அன்பர்களும் முதலவர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிகபரமாசாரிய சுவாமிகள், யாழ்ப்பாண பல கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி சண்முகதாஸ், ஆகில இலங்கை இந்துமாமன்றச் செயலாளர் திரு பொ. வல்லிபுரம் ஆகியோர் தலைமைதாங்கி நடாத்தி வைக்கவிருக்கின்றனர்.

11-1-79ல் நடைபெறும் இறுதிநாள் விழாவில் வித்துவான் வே. சா. குருசாமிதேசிகர் எம ஏ அவர்களுக்கு காரைநகர் மணிவாசகர் சபையின்சார்பில் நல்லதிருஞானசமபந்தர் ஆதீன முதலிவரினால பொன னாடை போர்த்திக் கௌரவிக்கப்படும். சுழத்துச்சிதம்பரதேவஸ்தானத்தின் சார்பிலபாரம்பரிய பதாதரம் இவருக்கு வழங்கப்படும். ——

புற மதத்தினரும் நாவார நுகரும் புனித சித்தாந்தத் தேன்

[திரு. A. நமசிவாயம், நல்லூர்]

'பக்தி வெளிப்பாட்டுக்கு ஏற்ற மொழி தமிழ் மொழியே. அம் மொழி கொரிக்க எம் மதத்தவராயினுஞ் சரி தொழுகை நேரங்களிலெல்லாம் சித்திக்குந் திருவாசகத்தைப் பாடி இறை வழிபாடு செய்ய வேண்டும்" என்று அழுத்தம் திருத்தமாகச சொன்னவர் ஒரு கதோலிக்கப் பாதிரியார் என்றால் எத்தனை பேர் நம்புவார்கள்? அந்தப் பாதிரியார் உலகஞ் சுமறிய தமிழர்; பன்மொழிப் புலவர், மோழியாராயச்சியில் ஈடுபட்டு உழைத்தவர், பண்பாளர்; தவசிலர் எல்லாவற்றுகும் மேலாக தமிழுணர்வைத் தம உயிரிலும் மேலாக மதிப்பவர். அவரே தவத்திரு தனிநாயகம் அடிகளாராவர். இவரைநுவா இத்தாலிய நாட்டினர், மதபோதகராக இந்திய மணணிலே காலடி வைத்தவர். தமிழர் மத்தியிலே வாழ்ந்து, தமிழ மொழியிலே ஈடுபாடுகொணடு தம மொழியைக் கசடறக் கற்றுத் தேறித் தமிழராக வாழ்ந்தவர் அவர் பெயர் வீரமாமுனிவர். இந்த இருவரும் - இனனும் பலர் இருக்கலாம். மணிவாசகபெருமானினபகதிரசப் படைப்புகளான திருவாசகத்தையும் திருவாசகத் தேனையும் இருகோளைபோல

மார்கழி நோன்பும் திருவாசகத் தேனும்

இப்படியாக எவரையுந் தன்னிடத்தே ஈர்த்துப் பேரின்பப் பெருவெள்ளத்தில் ஆழ்த்தவல்ல திருவாசகத் தேன் இறைவனையே ஆட்கொள்ளும் அனவுக்கு ஆற்றல் மிக்கது. படிப்பவரைப் பரவசமாக்குவது; கடின சித்தத்தையும் கரைக்கக்கூடியது.

மணிவாசகப் பெருமானின முதிர்ந்த அன்பிலே விளைந்த அழுத உலகுள்ளளவும் அருள்வழி காட்டும் அணையா விளக்கு, ஒருவாசகத்துக்கும் உருகாதார் இவ்வாசகங் கேட்டால் ஆனந்தக் கண்ணீரை ஆறாகச் சொரிவர்.

திருவாதவூரிலே அவதாரஞ் செய்து; ஆயகலைகள் அறுபத்துநான்கிலுந் தேறி, அரிமர்த்தன பாண்டியனின் முதலமைச்சராகப் பதவியேற்ற அப் பதவியைச் சிறப்பித்துப் பின்னர் குருந்தமர நீழலில் குருவாக வந்த இறைவனால் ஆட்கொள்ளப் பெற்றுப் பட்டம், பதவி, போகபாகியங்களை நீக்கி, அற்புதங்கள் பல புரிந்து இறைவனோடு சேர்ந்த மாணிக்கவாசகப் பெருமானின இத்திக்குந் தேனும் திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாந் திருமுறையாக வகுக்கப்பெற்றுள்ளன.

அழுதழுது பாடிய அன்பர்

மார்கழி பிறந்து விட்டால் ஆதிரைநாள் ஞாபகத்துக்கு வந்து விடும். தூயமையை முனவைத்து, அங்கங்களையெலலாம அழகுபடுத்திக கோலமிட்டு, நோன்பிருந்து, திருவெம்பாவையைப் பாடியுங் கேட்டும் மகிழவெய்திப்

(வளர்ச்சி 2 ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ராணினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தியதெல் லாமர னுமமே
சூழ்வையகமுந்துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

காலயுத்திஸ்ரீ மார்கழி சக-ஊ
(22-12-78) வெள்ளிக்கிழமை

மீண்டும் விரதவேளையில் வேற்றுமை?

விரதம் நோன்பு என்று சொல்லப்படும் அநுட்டான வேளைகள் புண்ணிய காலங்கள். இவை திதி நட்சத்திரம் என்னும் இரண்டு காலங்களாகக் கொண்டு வெவ்வேறுக்கணிக்கப்படுவன. திதியும் நட்சத்திரமும் ஒருங்கே குறிக்கப்பட்டபடி அமைதலும் உண்டு. அவ்வாறினை றி வருதலும் வழக்கம்.

திதி என்பது பன்னிரண்டு பாகை வீதம் சூரி மனிலிருந்து சந்திரன் விலகிச் செலலும் கால அளவையைக் குறிக்கும். ஏறு பகைப் பிரதமை முதல் இறங்கு பக்க அமாவாசை வரையுமுள்ளன மூப்பத திதிகள்.

நட்சத்திரம்பதின்மூன்று பாகை இருபது கலை வீதம் சந்திரன் மேட இராசித தொடக்கத்திலிருந்து விலகிச் செலலும் வகையில் இருபத்தேழு காலப் பகுதமைக குறிக்கும்.

எனவே திதியும் நட்சத்திரமும்குறித்தபடி ஒருங்கு அமைவது எப்பொழுதும நிகழ முடியாது.

அரேகமாக ஒரு இராசிக்குரிய ஒன்பது நட்சத்திர பாதங்களில ஏதாவது ஒன்றுடன் குறிக்கப்பட்ட திதி யமைந்து வருதலைக் காணலாம்.

திதி அடிப்படையாக வுள்ள விரதங்கள் பலவுள. அமாவாசை, சதுர்த்தி, சட்டி ஏகாதசி, சதுர்தசி பூரணை என்ற வகையிலுள்ள புண்ணிய காலங்களை வெவ்வேறு காலப்குறிப்பது எனபதை யாவருமு அறிந்து மன அமைதி அடைவதற்கு சோதிட நூற்பனர்களோ வேதாகம வித்தகர்களோ முற்பட்டு ஐயம திரிபறக் குறித்த விதம எப்பொழுது அனுட்டிக்கப்பட வேண்டியதனையு தெளிவாகக் கூறுவது சிவபுண்ணிய மாகும் அன்றே! புண்ணிய காலத்தைப்பற்றிப புகட்டு வது புண்ணிய கருமமாகுமு ஆலயமாலு.

அவ்வாறே நட்சத்திரங்களைக் கொண்ட விரதங்களு முளவுளன. சித்திரைச் சதுரை, வைகாசி விசாகம் திருவாதிரை, மகாசிவராத்திரி, கார்த்திகை கார்த்திகை மார்கழித திருவாதிரை தைப்பூசம் மாசிமகம் பங்குனி உத்தரம் என்பனவும் பிறவும் ஆம்.

பொதுமக்கள் இதுபோன்ற சமய அனுட்டானங்களைப்பற்றி அறிவதற்குரிய போத நூல்கள் வெளியிடப்படுதல அவசியமாகும.

திதியோ நட்சத்திரமோ சாதாரண நாள் ஒன்றில மட்டும் அமைவதுலை. இரண்டு நாட்களிலே பகுதியாய் நிலவுவதே வழக்கம. அவ்வாறினைப்படியால இந்த இரண்டு நாட்களில் எந்த நாள் குறித்த விரதத்துக்குரிய தினபதை மக்கள அறிய லவப்பது நன்றல்லவா?

விரதத்துக்குரிய திதியோ நட்சத்திரமோ இரவில நிகழவேண்டுமா அலலது பகலிலா? இரவில எதனை நாழிகை வரைக்கும? பகலில எதனை நாழிகை வரைக்கும நிகழவதைக் கைக்கொளளுதல்வேண்டுமு என்ற விளக்கம மிக முக்கியமான.

இவ்வாறே இளமபிறைதோற்றத்தைக கொளளுவ்ங்கு யெனன எனபதையும் மகக்ள அறிவதற்கு வழிவகுத்தல் நனறு அமாவாசையுன பிதுதியைநிலவுனறமாலுப பபாழுதுமலதான. சந்திதரிசனம செயதல முறை யெனினும பொதுவாக மக்கள மூனறுமணிக்குள பறை பாபபது வழமை.

விரதம என்ற சொலலுக்கு சததியம, தவம எனப பொருள உணடு. புணணியம ஏறின ஒனறு எனறு சொலவர்.

சாதாரம் கணிதமாகையால அதனபடி அதுவே இதுவர எனறு ஐயமறத் தெளிவு வேணடியதலலவு. அபபடியே ஆருமு விரதத்தை நிசசயபபடுதத்வதல வேறறுமை யுமலலு.

புத்தகச் செய்தி

சித்தாந்தச்
செழும்.புதையல்கள்

ஆக்கியோன் :
வித்துவான்
மு. கந்தையா அவர்கள்

வெளியிடுபவர் :
நழத்துச் சித்தாந்த
சைவ வித்தியா பீடம்

அறிவின் செறிவு சைவ சித்தாந்தம் என்பது உலகறிந்த உண்மை. இங்கே உலகென்னுமபோத உயர்தோர் என்பது பொருள். உயர்ந்தோரெனின் அறிவால் ஒழுக்கத்தால் இறை நெறியால் மேல் நிலையில் நிற்பவரையாமெனக, இத்தகைய தத்துவச் செறிதாகவிளங்கும் சைவசித்தாந்தம் தேடற்கரிய செல்வம். ஆனல் அங்கிதியோ யாவருக்கும் எளிதிற் கிட்டக்கூடிய தொன்றன்று; புதையல்களாகப் பொருள் பொலிந்திருக்கின்ற இந்த நிதியை ஒரு சிறிதேனும் அனுபவிக்க ஆசைப்படுவோருக்கு எங்கெங்கே மறைபொருள் உண்டென்பதை அறிந்து அறியவைப்பது அறத்தின்பாற் பட்டதோர் பணியே.

இப் புண்ணிய கைங்கரியத்தை ஆற்ற முற்பட்டவர் எப் புண்ணியஞ் செய்தாரோ என்று நாம் விளங்க வேண்டும் தொல்லுயிரும் பிறவிச் சூழும் தனை நீங்கி எல்லையில பரம பொருளை அடைய வழி காட்டும் நல்ல ஆதீனத்திலே சைவ சித்தாந்த போதனை செய்யும் தெய்வ வாய்ப்பு வித்துவான்களுக்குண்டென்றால் அந்த தொடர்பும் முன்செய் நல்வினைப் பயனே.

சைவ சமயமே மெய்ச் சமயம என்று வாதிட்டு நிலை நாட்ட வேண்டிய அவசியமொன்றுமில்லை சூரியப் பிரகாசம் ஒளி தானே என்று ஆராயாமாரும் துணிவார்களா? ஞாயிற்றின் நமக் கதிரைப் பயன்படுத்தவே வழி தேடுவர். அம் முயற்சியிலே அதன் அடிப்படைத் தத்துவத்தையும் எடுத்துக் கூறும் ஆற்றலையும் பெறுவார். அத்தகையதோர் பணி வித்துவான் அவர்களின் இந்த நோக்கம்.

அம்மைக்கும் இம்மைக்கும் செமமை தரவலலது சைவ சித்தாந்தம் என்ற கருத்தைப் பொல்லாப் பிளளையாரின் உருவ நீழற் கீழ் பதினமூன்று பகுதிகளில் நுணுகி ஆய்ந்து விளகம் பெருக்கியிருக்கினறனர் நூலாசிரியர்.

உயிர்க்குறும் அறிவு தூல அறிவெனறும் சூக்கும அறிவென்றும் இரு வகைத்து. உடல் அதன அறிதற கருவிகள். இவற்றை அறிவது தூல அறிவு. திருவருளாற் பெறுமறிவு நுணணுணர்வெனும் சூக்கும அறிவு

இதனைப் பெறும் ஞானமாகிய தத்துவ ஞானத்தை யுணர்த்தும் நூல்களை ஞான சாத்திரங்கள். — இவ்வாறு வளகுகச் சித்தாந்த சாத்திரங்களின திருவார் சிறப்பை எடுத்துக்கூறிச் சைவ சித்தாந்த பாதத்தைப பதுத்தற்கு யுகங்களாக அமைந்த அவற்றை நூலாசிரியர் விரித்துரைக்கும் முறை இந்நூலைப் படிப்போர் மனத்தமல ஒரு பாடத திட்டத்தைப் படிய வைப்பதுபோனறு மிளிர்கினறது.

சைவ சித்தாந்தக் கருவூலங்களாம திருமுறைகளின் பொருளை தமிழமறைஎன்ற பெயர் சுட்டுவதுபோனறு வெளிப்படையாகா திருப்பதைச் "சைவ சித்தாந்த அறிவு விளக்கில் விளங்க"

திருத்தொண்டர் திருநாட் சிந்தனை

சி. சிவகுருநாதன் M. A., Dip-in-Ed.

வாயிலார் நாயனார்

(குருபூசை - 6-1-79)

துறைக் கொண்ட செம்பவளம்
இருளகற்றுஞ் சோதித்
தொன் மயிலை வாயிலான்
அடியார்க்கும் அடியேன்
(தி. தொ. தொகை)

சீர் பொருந்திய தொண்டை நாட்டிலே செல்வம் நிறைந்த திருமயிலாபுரியிலே வாயிலார் என்னும் தபோதனர் தோன்றினார். அவர் சிவனடியார் பதியிலே சிறந்து விளங்கி, பரமசிவனை ஒருபோதும் மறவாத தன்மை பொருந்திய மனமாகிய கோயிலினுள் இருத்தி, உறவாதி தன்னையுணரும் திருவிளக்கேற்றி, இறவாத ஆநந்தமஎன்னும்திருமஞ்சனமாட்டி, இறவாணர்க்கு அன்புஎன்னும் அமுதத்தை நிவேதித்து, அர்ச்சனை செய்துவந்தார், இங்ஙனம் நியதி முழுவாமல் நெடுநாள் செய்து சிவபெருமான் அடிநிழலடைந்து இனிதிருந்தார்.

திருநாள்: மார்கழி; இரேவதி;

புற மதத்தினரும்

1 ம் பக்கத்து வளர்ச்சி

பிறவிப்பயன் பெற்று இன்புறுங் காலம் இதுவென்றுல் மிகையாகது. பக்குவம் முதிர்ந்த ஆன்மாக்கள், ஆணவ இருளிலே அகப்பட்டு, அறியாமை யென்னும் உறக்கத்திலே நீடித்திருக்கின்ற ஆன்மாக்களின் தன்மையினைக் கண்டு, மனமொந்து அவ்வுறக்கத் திலிருந்துநின்றும் விழிப்படையச் செய்கின்ற நன்முயறசியில் ஈடுபடுவதாகிய ஒப்பற்ற கருத்தமைந்த பாடல்களே அவைகள். இந்

வேண்டுமென்று குறிப்பிடும் நூலாசிரியர் இருமுறைத் தோத்திரங்களும் சித்தாந்த சாத்திரங்களும் ஒருங்கேஉணரப்படவேண்டியன என்ற கருத்தை அழுத்தமாகச் சொல்கின்றார்.

சைவ சித்தாந்த உணர்வின் ஒளியே நாவலர்பெருந்தகை, இராமநாதபுலவர் எல் இருவரிலும் விளங்கிய நேர்மை வாய்மை அறிவு வீறு என நூலாசிரியர் சுவையாக அமைத்து சைவ சமயிகள் சந்தான குரவர்கள் சமய குரவர்கள் தந்த அறிவுச் செல்வத்தைப் பயனபடுத்த வேண்டும் என்ற எமமை ஊக்குவித்தல் காண்க.

சத சத் ஆராய்ச்சி, ஆணவ விசாரணை மாயா வாகாரம திரோதான மான்மியம் ஊழ்ப்பிரச்சினை இவற்றில் அமைந்துள்ள அரிய ஆராய்ச்சிக் குறிப்புக்களையும் முடிவுகளையும் மாணக்கர்களும் சமயபாட ஆசிரியர்களும் நனகு பயன்படுத்தக்கூடிய பாங்கான இந்நூல சைவ அன்பர்கள யாவரதும் கையில் இருக்க வேண்டிய ஓர் நனனூலாகும்.

சைவப் பெரியார் தரும்
சைவ சமய சாரம்

இக்க உடம்பு நம்மோடு எப்போதும் இருப்பதன்று. ஒரு நாளைக்கு நாம் இதை விட்டு விலகவேண்டி வரும். அப்போது நமது தாய் தங்கையரும்- சுற்றத்தவரும், நண்பரும் நம்மை விட்டுப் பிரிந்துவிடுவார்கள். நமது பொருள் பண்டங்களும் தொடர்பற்றுப் போம். கடவுள் ஒருவரே எக்காலத்திலும் எல்லையில்லாத அன்பைச் சொரிந்துகொண்டு நம்மோடு துணையாய் நிற்கும் மெய்ப்பொருள்.

ஆதலால், நமமுடைய மனம் அவரையே நாடுதல் வேண்டும், நமது சீவனதிக்கு வேண்டிய தொழில்களை நாம் செய்யும்போது நமது மனம் அவற்றிலே செல்லுமாயினும் அதன் நாட்டம் எப்போதும் கடவுளிடத்திலேயே இருத்தல் வேண்டும்.

நாட்களில் அப்பாடலகளைப் படிப் போரும் கேட்போரும் அதேகர்.

மணிவாசகப் பெருமான் இறையன்பின் எல்லையைக் கண்டும அவ்வளவில் திருப்தியடையாது மேலும் மேலும் அதற்காக அழுதழுது பாடியவர். "அன்பீற்குமுண்டோ அடைக்குந் தாள்" என்ற வளளுவப் பெருமானின் கூற்றுக்கு இலக்கணமாக வாழ்ந்தவர். அந்த இறையன்புக்காக ஏங்கியேங்கி, அழுதழுது அதிலே இன்புற்றுப் பாடிப் பாடி பரவசமடைந்தவர் ஞான நெறியாகிய சன்மார்க்க நெறி நின்று, சாயுச்சிய முத்தியடைந்தவர் ஞானத்தை விழைபவர் மணிவாசகப் பெருமானின் பக்திரசப் பாக்களிலே ஈடுபாடுகொள்வர் என்பது முடிபாகிய பேருண்மையே.

வாசகத்துக்குத்தனியிடம்

இவ்வகையாகச் சிறப்புற்று மிளிரும் திருவாசகப் பாடல்களை அதிக அளவிலே ஆலயங்களிலே பாடுவிக்க ஆவன செய்யவேண்டும். ஒரு வார்களுக்கு இவ்வகையிலே முயலவேண்டும் இப்பாடல்களின் இனிமையும், போருளும் நாமவரைப் புனிதப்படுத்தவேண்டும். நல்லதோர் சமுதாய அமைப்புக்கும், இப்பாடல்கள உதவுமென்பதை உறுதிநோக்கின் உணர்ந்து கொளளலாம உள்ளத்தின் இயலபேற்ற செயல்களுக்குக் காரணமாய் அமைகின்றன. பண்பட்ட உள்ளம பகுவமானசெயல்களைத் தூண்டக்கூடியது உளப் பாங்கு மேனமையுறச் சாதகமாக் அமையுஞ் சாதனங்களில் அருட் பாக்கள மேலே வைத்து எண்ணப் படதக்கவை. அவரவரை அருட்பாக்களின வரிசையிலே தித்திக்கும் திருவாசகத்துக்குத் தனியிடமுண்டு எனபதை அருளுலகம் ஏற்றுக்கொணடிருக்கிறது.

ஆகையால் ஆலயங்களிலும், தேவாரப் பாடசாலைகளிலும், கல்விக்கூடங்களிலும் (திருவெமபாவை வழிபாட்டுக் காலத்தில) தேவாரங்களைப் போலவே திருவாசகங்களும் முக்கியமாக இடம்பெறுதல அவசியமட்டுமல்ல, ஆசிரியர் மேம்பாட்டுக்கும் அது நற்பாதை வழி காட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புட்பவிதி

(வித்துவான் க. சுப்பையாபிள்ளை எழுதிய உரை)

விலக்கம் கொய்யலாகாத (எடுக்கக்கூடாத) நாள்கள்.

தவமுறு மாதமுன் சதுர்த்தி யட்டமி
நவமியே சதுர்த்தசி நவின்ற நல்லுவா
அவமறு சோமவா ரத்து மன்பர்கள்
சிவனருச் சனைசெயும் விச்வத் தீண்டிடார் (7)

அரும்பதப்பொருளி: மாதமுன்-மாசபிறப்பு. உவா-பௌர்ணமியும் அமாவாசையும், சோமவாரம்- திங்கட்கிழமையும். தீண்டிடார்- மரத்தில் கொய்யமாட்டார், இவையல்லாத பற்றைக்காலங்களிலே வில்வம் எடுத்து வைத்துக் கொள்ளல் வேண்டும்.

பஞ்சவில்வங்களாலும் அருச்சிக்கலாம். அவையாவன - வில்வ மூட்கிளுவை, மாவிலங்கை, விளா, வெண்நொச்சி என்பன இவற்றுள்ளே வில்வமொழிந்த மற்றை நான்கு பத்திரங்களும் எல்லா நாளிலும் கொய்தெடுக்கலாம்.

வில்வம் ஆறுமாதத்துக்கும், வெண்துளசி ஒரு வருஷத்துக்கும் தாமரைப்பூ ஏழுநாளிற்கும்(சிவப்பலரியும், வெள்ளாம்பலுமாகிய) அலரிபூ மூன்றுநாளிற்கும் வைத்துச்சாத்தலாம்.

முற்றின வில்வபத்திரத்தைக் கழுவி நிழலில் தூயவிடத்தில் உலரவைத்து ஓலைப்பூங்கூடையில் எடுத்துவைத்துக்கொண்டால் பல மாசங்களுக்கிற பழுதுபடாமல் இருக்கும்.

நிர்மாலியமான வில்வமும் பொன்னூற் செய்த மலருமும் (பொன்மலர்- சுவர்ணபுஷ்பம்) மீள மீளக் கழுவியும் சாத்தலாம்.

கிங்கை நகரில் எங்கள் அபிமானி சிவபதமடைந்தனர்

இந்துசாதன நேயர்களுள் நன்கு குறிப்பிடத் தக்க திரு. ஐயம்பிள்ளை இராசா அவர்கள் 21-12-1978 திகதி சிங்கை நகரிலே சிவபதமடைந்தனர் என்றறிகின்றோம் அதருடன்.

பொதுப்பணி விருப்பினராகிய இவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சைவவித்தியா விருத்திச் சங்கம், நாரந்தனை கணேசவித்தியாசாலை முதலியவற்றுக்கு நன்கொடை வழங்கி ஊக்கமளித்துச் சைவாபிமானியாக விளங்கி வந்தவர்.

மலேசியாவிலே உத்தியோகத்தமர்ந்து அரசாங்க கணக்காளர் உயர் பதவியில் வீற்றிருந்து ஓய்வடுத்த பின் சைவ எழுச்சிக்கும தமிழ் வளர்ச்சக்கும் உரிய தொண்டுகளிலே மிகப்பட்டு வந்தனர். சிங்கைச் சண்பக விநாயகர் ஆலய பரிபாலன சபை அங்கம் வகித்துச் சிவப் பணி செய்து பயன் பெற வாழ்ந்த இவர் எங்கள் சைவப் பிரகாச அச்சக அதிபராக முன் நல்கு கடமையாற்றிய திரு. ஐ. சின்னத்தரை அவர்களின் சகோதரர். இவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனை வணங்குவாம்.

Sweet Ambrosia — Thiruvachakam

(Continued from page 4)

Thiruvathavooradigal in his inimitable Thiruvasagam puts the Divine Dharsanam in poetic finesse thus

வினைப்பிறவி என்கின்ற வேதனையில் அகப்பட்டு
தனைச்சிறிதும் அறியாதே தளர்வெய்திக கிடப்பேனை
எனைப்பலரும் ஆடகொண்டென பிறப்பறுத்த இணையிணையை
அனைத்துலகும் தொழுந் தலை அமலதையே கண்டேனே'

When lying perplexed being caught in the woes of karma and unable to know the Lord who has no equal. He took me into His fold and rid me of my births, said Manichavachagar.

In this brief space it will not be possible to sketch anything more than a skeleton view of only one of the thousand gems of spiritual serenity that is Thiruvachagam.

Here is one drop of that Ambrosia that will suffice for study during the Thiruvembhavai Festival

வேண்டத தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயனுமாற கரியோய் நீ
வேண்டி எனைப் பணிகொண்டாய்
வேண்ட நீ யாதருள் செய்தாய
கானும் அதுவே வேண்டினலால்
வேண்டும பரிசொன றுண்டெனில
அதுவுங் உன்றன வருபபனறே.

Playing poetic pun on the word (வேண்டும்) wish, Thiruvachagaganar makes an excellent point in the truism that it is God who knows what the devotee should wish for. The devotee must wish what the Supreme Lord wishes that the devotee should wishfor. It is all the Divine Will.

Here Manickavasasa Swamigal in a mood of spiritual ecstasy exclaims that Providence sought for and took him as His dicipie, a consummation which even Bhrama and Vishnu could not enjoy.

தாமரைத் தாளிணை போற்றித் திருவெம்பாவைத் தவம்

ஆசிரியர், "இந்துசாதனம்" ஐய,
வணக்கம்.

திருவேம்பாவைத் திருநாட்களில் திருவாதவூரடிகள் தெய்வப் பாடல்களாம திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை முதலாம் திருவருட்பாடல்களைச் சிறப்பாகத் திருக்கோயில்களிலும், சிவனடியார்களின் வீதிபஜனைகளிலும், வானொலியிலும் கேட்டுப் பரவசமடைய முடிகிறது! எங்கள் கிராமத்திலுங்கூட விளங்கும் யாழ். சைவ சமய அபிவிருத்திக் கழகம் கடந்த பல ஆண்டுகளாக வீதி பஜனையைச் சீராகச்செய்து வருகிறது. நாவலர் பெருமானது காலத்திற்றான் சைவசமயப்பூசல்களும் கேலிப் பிரசாரங்களும் இருந்ததாக அறிகிறோம். இன்று சமயக் கல்வி என்ற பேச்சு மிகுதியாக இருந்தும் இன்னமும் மானவர்மத்தியில் உறுதியான சமயப்பற்றினைத் திருப்தியாகக் காண முடியவில்லை! இன்றையநிலைபற்றி பழம்பெருஞ் சைவசபைகள் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்! சைவசமய அறிவும் ஒழுக்கசீலமும் உள்ளவர்களாற் பாடசாலைகளிற் சமய போதனை நடாத்தப்பட வேண்டும். சைவசமயமகாநாட்டிலாவது சமய ஆசாரசீலமற்றோர் கையில் மாணவர்களை ஒப்படைக்கலாமோ என்ற உணர்வுள்ள சைவ மக்கள் விளர்ந்தெழவேண்டும். சமய பாட பரீட்சைகளிலே திருமுறைப் போட்டிகளிற் பரிசுபெறும் மாணவர்களை ஆசிரிய பயற்சிக்குத் தோற்ற விசேட வசதி செலுத்தப்பட வேண்டும். திருவெம்பாப் பஜனையில் இறுதித் திருப்பாடலிலுள்ள ஒரு வரியைப் பாராயணம் செய்யும்போது சில மாணவ மாணவிகள் பொருளின் புனிதத்தை வளங்காமையால் மௌனம் சாதிக்கிறார்கள். ஆதலின் தலை கூர்ந்து குறித்த பாடலின் பொருளை விளக்கியுதவுதல் புண்ணியமாகும்.

(கா. இ) உபதலைவர்,
யாழ். சைவ சமய அபிவிருத்திக் கழகம்.
நாயன்மார்கட்டு யாழ். 26-12-78.

யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்!

திருச்சிற்றம்பலம்.

போற்றியருளுக கினலுதயாம பாதமலர்
போற்றியருளுக கினனதமாஞ் செத்தளிர்கள்
போற்றி யெலலாவுயிர்க்குமி தோறறமாம் பொற்பாதம்
போற்றியெலலாவுயிர்க்கும் போகமாபபூங்கழலகள்
போற்றியெல்லா வுயிர்க்கு மீரு மிணையடிகள
போற்றிமா னாணமுகனும காணாத புண்டரிகம்
போற்றியாமுய்யவாட் கொணடருளும பொனமலர்கள்
போற்றுயா மார்கழி நீராடேலோ ரெம்பாவாய்.

திருச்சிறறம்பலம்.

இத் திருவாசகச் செய்யுளில் மாணிக்கவாசக சுவாமிகள் சிவபெருமானுடைய திருவடியின் பெருமையைக் கூறுகின்றார். அவருடைய திருவடியே பஞ்சகிருத்தியபதத்தைப் புரிகின்றதென்னும் கூறுகின்றார். உலகத் தோறறத்திறகு அவருடைய திருவடியே காரணமாகும். நடராசப் பெருமானுடைய திருக்கரத்திலுள்ள உடுக்கு படைத்தலையும் அபயகரம் காத்தலையும் அகனி அழித்தலையும் ஊன்றிய பாதம் மறைத்தலையும் தூக்கிய பாதம் அருளலையும் குறிக்கும். இச் செய்யுளின் கருத்து பின் வருமாறு.

"எல்லாவற்றிற்கும் ஆதியாய் இருக்கும் உன்னுடைய திருவடிகள் எமக்கு காப்பாற்றியருளுக. உலகமெலலாம் அழுந்தகாலத்தும் அழியாது அந்தமாய் நிலைத்து நிறகும் உனது திருவடிகள் எமக்கு காப்பாற்றியருளுக. எலலாவுயிர்களும பிறவிதோறும் எடுப்பதறகும் காரணமாயுள்ள உன்னுடைய திருவடிகள் எமக்கு காப்பாற்றியருளுக. எலலாவுயிர்களுக்கும இகபர போகங்களைக் கொடுத்தருளுகின்ற உன்னுடைய திருவடிகள் எமக்கு காப்பாற்றியருளுக. எலலாவுயிர்களும சமூல முத்தியடைதறகாக துடிக்கின்ற உன்னுடைய திருவடிகள் எமக்கு காப்பாற்றியருளுக. வஷ்ணுவும பிரமனும் அறிய முடியாத தாமரை மலர் போன்ற (தாமரை = தாமரை) உன்னுடைய திருவடிகள் எமக்கு காப்பாற்றியருளுக. எனவே உய்கலெனைவேடருளிய பொன் போலுந் திருவடிகள் எமக்கு காப்பாற்றியருளுக. என்னுடைய தொழுகுலே! நாங்கள் வந்த மாகழுத தலைவில நீராடுவதறகுச் செலவோம்".

மகாகும்பாபிடேகம்

மயிலிட்டி தெற்கு, தாடடையிட்டி அருளமகு துர்க்கை அம்பாள் பெருமானுக்கு ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன மகாகும்பாபிடேகம் தை மாதம் 5-ஆம் நாள் (19-1-79) வெள்ளிக்கிழமை காலை மகாயாகபூசை ஆரம்பமாகி பகல் 12 மணிக்கு மகாபிஷேகம் நிகழும்.

ஆரம்பக்கிரியைகள் தை மாதம் 4-ஆம் நாள் (17-1-79) புதன்கிழமை காலை 6-30 மணிக்கு ஆரம்பமாகி வதிவாசஞ் செய்யும். கும்பாபிடேக தினத்தன்றிரவு திருவீதி உலா இடம்பெறும்.

பிரதிட்டா குருமார்:

சிவதிரு. க. சிவபாதசுந்தரக குருக்கள், சிவாகம கரியாபூஷணம சிவதிரு. சிவஸ்ரீ கைலாசக்குருக்கள் சிவதிரு. மயூரதனக்குருக்கள் சிவதிரு. ம.சா.பாலசுந்தரக்குருக்கள் ஆகியோர் பணி புரிவர்.

குரவர்கள் கொடுத்த குரல்

சிவஞானத் தெளிவைச் சின்னஞ் சிறு வயதிலே நமமாகப்பெற்றதவசிரேட்டர் திருஞான சம்பந்த சுவாமிகள், உலகம் உய்யச் செய்த உபதேசமாந் திருமுறைகள் மூன்றும் சைவ சித்தாந்தத்தின் செழும்பொருள் அமுதமே. இவ்வாறே ஏனைய குரவர்களும் சைவ நெறி நிற்க மக்களுக்குச் சித்தாந்த போதத்தை இசைத் தமிழாலே திருவாய் மலர்ந்திருக்கின்றனர்.

கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கலைபவர்போல நாம் சமய வாதமும ஆராய்ச்சியும் செய்து காலத்தைக கழிக்கின்றேமேயன்றி மெய் வழி நிற்கும வகையை அறிகின்றிலோமில்லை.

குரவர்கள் மானுடர் நாவருக்குமாகக் குரல கொடுத்திருகின்றனர்.

கோட்டு விற்பனவு விளம்பரம்.

M B 585

தபபிப்பிள்ளை பொன்னம் பலமும
2 பெண் சிவபாக்கியமும் இருவரும
சண்காலை கிழக்கு சங்காலை வழக்காழிகள்
எதிராக
திருவம்பலம் சிவசுப்பிரமணியமும
5 பெண் இரத்தினமும் பங்காளர் ஒழுங்கை மலலாகம
எதிராளிகள்

மலலாகம் டிஸ்றிக் கோட்டின் M B 585-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் வபரிக்கபடும் இரு துண்டுக் காணி 1979 ஜூ ஜனவரி மீ 16-ம் டெ புதனகிழமை மு.ப. 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்

தீர்வைத் தொகை ரூபாய் 6530 பிஸ் 1—3—75 தொடக்கம் 6—5—77 வரைக்கும் ரூபாய் 5-500 க்கு 10% வட்டியும் பின் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 5% வட்டியும் கோட்டுச செலவு ரூபா 626-95.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் வலிகாமம் வடகுப் பகுதிமல்லாகம் கோயற்பற்று மல்லாகம் இறை சாதாரண வததை நிலபர (உ) நூறும் பணமாரு - இதறகு எல்லை கிழகது சுப்பிரமணியதினு தனக வடகுபு மேறகு முருக்கு வெதாரணியம மனைக்கு ரிய ஆதனம் எதறகு கீழசால லபபடு இரண்டாம் ஆதனம் இது இடைலபம முற பதிவு ஏச 480 / 139

மேறபடி இறை சாதாரண வததை நிலபர (உ) நூறுபதும நாணூறும எல்லை கிழக்கு காரதிகேசு சுப்பிரமணியதினுதனம வடக்கு மேறகாட்டிய முதலாம் ஆதனம் மேறகு முருக்கு வெதாரணியம மனைக்கும மறுமேறகும் உரிய ஆதனங்கள தெறகு தாமோதரம்பிளளை மாணிக்கதினுதனம். இவ்விடங்களுக்கு முற பதிவு ஏச 480/140.

சி. செ. மாணிமுத்தி
நீதிமன்றங்களின் விறபனவு ஆணையாளரும் லங்கா நிதிபபராளரும்
வதாரண வளவு,
சிதகன்கேணி,
9-11-78.

165- 29/12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Hindu Organ

Friday, December, 29, 1978

TOTAL REFORM - TO SAVE THE SITUATION

Apart from the impact of the abnormal situation that has arisen as a result of a hard-hitting cyclone, the entire country is experiencing a very menacing decline in the general trend of civilised life. The numerous detections of fraud, corruption, breach of trust in almost every sphere of public activity only indicate that a devastating disaster in the form of moral degradation will soon overtake the people unless immediate and effective action is taken to effect a total reform in the national sphere of duty whether pertaining to the public sector or the private plane.

That eighteen thousand bogus certificates could have been issued to candidates who sat an examination that was conducted by the Government, is on the face of it incredible. Yet it has happened and that by the ingenious scheming of a master mind of methodical fraud. No one can feel proud of the detection of this brand until the entire modus operandi has been found out.

Not long ago it was detected that operators in the C T B had so manipulated the ticket issuing mechanical device as to make a fortune hoodwinking the Authorities and the travelling public alike. Now, there is the daily performance in dramatic manner of the no - changer - conductor. Coins of the five and ten cent denominations play hide and seek in the hide - out pockets of the cool-headed conductor of omnibuses. The drama is made more dramatic by the desperate appeal of the Administration to the passengers for passive co-operation by tendering the exact fare and nothing more. The Authorities are helpless to bring the miscreants to book just as the hit and run highway robber is allowed to be at large.

That is not all. It is being dinned into the ears of a dazzled public that losses of several hundred thousands of rupees are being unearthed daily in the different departments resulting from frauds, negligence and incompetence of officers.

To add to the long list of these abominable acts of deceit, deception and dishonesty, there are regularly planned highway robberies and murders committed by armed gangsters.

Cumulatively, these horrid happenings decidedly point to the disturbing trend in the national life of this unfortunate country.

Legislation alone can not remedy the situation unless those who are bound to maintain law and order are fully competent, hundred percentum honest and well equipped for the purpose.

The Augean Stables must be cleansed forthwith A total reform must be effected. Then only can the nation survive.

PIONEER LEADER IN OUR ISLAND'S POLITICS

If Sir P. Ramanathan dominated the Legislature by his doughty activities as the first elected representative of the people, his brother Sir Arunachalam was conspicuous outside the Legislative Council in the struggle for freedom.

The Ceylon National Congress the only representative and responsible all-Island political body in the beginning of this Century was organized and led by Sir Arunachalam with such success that the Colonial Rulers of our Island were set thinking seriously about their affairs here.

Fully capable of leadership by reason of great scholarship, sound commonsense and experience of Administrative Prowess in the highest rungs of the Civil Service and Judicial learning, Sir Arunachalam was able to guide the affairs of the Congress very much in the lines of the Great National Organization across the waters (the Indian National Congress.)

Above all these achievements, Sir Arunachalam's religious zeal was convincingly prominent. The Colombo Saiva Paripalana Sangam and other Hindu Organizations in the Metropolis had the benefit of his learned guidance.

The month of January in which this Island lost the valuable services of a great patriot is a period for cherishing his memory and emulating his worthy example of Selfless Service to mankind.

சைவ பரிபாலன சபை

1978 — 1979 ஆம் ஆண்டு

புதிய உப குழு நிர்வாகிகள்

புண்ணியநாச்சியம்மை உப சபை

திரு த. சண்முகலிங்கம் (அழைப்பாளர்)
திரு நம. சிவப்பிரகாசம்
திரு இ. சபாபந்தனாதன்
திரு நா. கைலாயபரா
திரு மு. மயிலவாகனம்

வழக்குகள் ஆலோசனை உப சபை

திரு த. சண்முகலிங்கம் (அழைப்பாளர்)
திரு இ. இ. தங்கராசா
திரு சி. இராசேந்திரம்
திரு நம. சிவப்பிரகாசம்
திரு இ செ. மனமதராயன்

அச்சக உபசபை

திரு ம. அமிர்தலிங்கம் (அழைப்பாளர்)
திரு நம. சிவப்பிரகாசம்
திரு நா. த. சிவஞானம்
திரு சே. க. சண்முகம்பிள்ளை
திரு இ. பொ. இராசையா

கார்த்திகை மட திருமண உப சபை

திரு மு. மயில்வாகனம் அழைப்பாளர்)
திரு இ செ. மன்மதாரயன்
திரு பே. சோமசுந்தரம்
திரு இ. சம்பந்தநாதன்
திரு சி. சிவகுருநாதன்

பரீட்சை, பண்ணிசை, பாடப் புத்தகம், நூலகம் உப சபை

திரு வ. கந்தசாமி அழைப்பாளர்
திரு சிவ. உ. சோமசேகரம்
திரு எஸ். சிவராசா
திரு சே. க. சண்முகம்பிள்ளை
திரு க. சிற்றம்பலம்

சமயப் பிரசாரம் அபிவிருத்தி உப சபை

திரு இ. இ. தங்கராசா (அழைப்பாளர்)
திரு இ. சம்பந்தநாதன்
திரு மு. மயிலவாகனம்
திரு ம. அமிர்தலிங்கம்
திரு வ. கார்த்திகேசு

Sweet Ambrosia — Thiruvachakam

The Thiruvembavai Festival reminds us all of the sacred songs that expressed the yearnings of one of the Four Great Saints - Samaya Kuravars. Manickavachagaswamigal, unlike the other three Teachers, Thirugnanasambandha Moorthigal, Thirunavukkarasar and Sunderamoothigal, was for a time engaged in temporal affairs as Minister of the King of Pandi. which responsibility was entrusted to him because of his wide learning. But the soul - power of this saintly Minister was such that all the great influence of Ministerial Authority could not make im material - minded, Aven as a Minister, Thiruvathavoorar was wholly religious and devoted to spiritual aspirations. It so happened that while on a ministerial mission, Thiruvathavoorar had the good fortune to sit under the feet of a person of spiritual eminence and listen to the soul - stirring teachings. The spiritual impact was so impressive that the Minister entirely forgot himself and his mission and emerged as a disciple of the Great Lord, realizing that his Guru was none other than Parameshwara Himself.

This rare Dharsan of the Paramasariyer by a devotee may be qualified as how God manifests Himself before a disciple who keeps on yearning for the Supreme Lord Saint Thirunavukkarasar expresses the experience of a similar realization when the infliction on him by the Jains of incarceration in a kiln made no adverse effect but created a soothing atmosphere of serene exhilaration as that of the sweet rhythm of a musical instrument or the fascinating moon in its prime or a cooling breeze or the flower - bedecked fountain in the form of the protective shadow of the Feet of Providence.

விறகிற் றியினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன மாமணிச் சோதியான்
உறவு கோலநட் டுணர்வு சுயிற்றிலை
முறுகவாங்கிக் கடைய முனனிறகுமே

that was how Saint Appar describes the sudden appearance of the Supreme Lord in front of a determined devotee.

Saint Manickavachagar did the Churning so very fervently that the Heavenly Butter - Paramasivan presented Itself to the Churner. The Highly effulgent Parameswara stands concealed in the Soul and reveals Itself to the uncompromising devotee who uses love and knowledge so very efficently in the process of this venture of seeking the Truth

(Continued on page 3)

அடுத்து வரும்

விரத நாள்கள்

சதுர்த்தி	செவ்வாய்	2-1-79
ஷஷ்டி	வியாழன்	4-1-79
கார்த்திகை	திங்கள்	8-1-79
ஏகாதசி	செவ்வாய்	9-1-79
பிரதோஷம்	புதன	10-1-79
பூரணை	வெள்ளி	12-1-79
சதுர்த்தி சங்கிரந்தி ஞாயிறு		14-1-79
ஷஷ்டி	வெள்ளி	19-1-79
ஏகாதசி	புதன்	24-1-79
பிரதோசம்	வெள்ளி	26-1-79
அமாவாசை	சனி	27-1-79
சதுர்த்தி	புதன்	31-1-79
ஷஷ்டி	வெள்ளி	2-2-79

பண்ணிசைப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம் - சைவ பரிபாலன சபையால (26 - 11 - 78) இல் நடாத்தப்பெற்ற சமய பாடப் பரீட்சைப் பெறுபேறுகள், பாடசாலைகளுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் 7-1-79 - இல அனுப்பப்படும்.

வ. கந்தசாமி
தேர்வுச் செயலாளர்

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நானமறை யறங்க ளோங்க
நற்றவம் வேளவி மல்க
மேனமைகொள் சைவநீதி
விளங்குக உலக மெலாம்.

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450 K K. S. Road, Vannarponnai, Jaffna (Telephone: 356) on Friday, December 29, 1978.
Editor-in-Chief:
R N. Sivapirakasam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org